முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் புகைப்பட நிபுணர் கோவை சுப்பு தமது 61வது ஆண்டு பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்!

சென்னையில் ஹாஸ்டல், PG வாடகை அதிகரிப்பு!

சென்னை, மே 4- வணிக சிலிண்டர், விறகு கட்டைகள், மளிகை பொருட்கள் விலை உயர்வால் வரும் 5ம் தேதி முதல் சென்னையில் ஹாஸ்டல், PG வாடகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

4 பேர் தங்கும் ஹாஸ்டல் அறையின் கட்டணம் ரூ.6,500ல் இருந்து 7,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து விடுதியில் தங்கி இருக்கும் விருந்தினர்களுக்கு தமிழ்நாடு ஐடி விடுதி, PG ஓனர்ஸ் அசோசியேசன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மேற்கு, ஈரோடு கிழக்கு, மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளரும், ஈரோடு மேற்கு, சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளருமான சு.முத்துசாமி தலைமையில் வாக்கு எண்ணிக்கையின் போது முகவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றி வழக்கறிஞர்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் சா.செந்தில்நாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிடமாடல் ஆட்சியில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக

இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு !

கச்சா எண்ணெய் விலை உயர்வால்

சோப்பு, ஷாம்பு விலை உயரும் அபாயம்!

புதுடெல்லி, மே 4- கச்சா எண்ணெயுடன் தொடர்புடைய மூலப் பொருட்களின் விலை உயர்வால் சோப்பு, ஷாம்பு, சலவைத்தூள் விலை உயர்கிறது.

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து நடத்தி வரும் போர், தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தாலும் உலகளவில் எண்ணெய் வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எல்.பி.ஜி. விநியோக தடைகள் மற்றும் தாமதங்களால் ஏற்பட்ட கடும் பாதிப்பை ஏற்கனவே சந்தித்து வருகிறது. எல்.பி.ஜி. பற்றாக்குறை இல்லை என்று அரசு கூறிவந்தாலும், களத்தில் ஏற்படும் தாமதங்கள், நீண்ட காத்திருப்பு காலங்கள் மற்றும் விநியோகங்களில் நெருக்கடிகள் நிலவி வருகின்றன.

இந்நிலையில், கச்சா எண்ணெய் சார்ந்த மூலப்பொருட்களின் விலையில் ஏற்பட்டுள்ள கடும் பணவீக்கத்தின் தாக்கத்தை குறைக்கும் நடவடிக்கையாக நுகர் பொருள் நிறுவனங்கள் தயாரிப்புகளின் விலையிலும், எடையிலும் மாற்றம் செய்து வருவதுடன், அதிகரித்து வரும் உற்பத்தி செலவுகளை சமாளிக்கும் வகையில், நுகர் பொருள் நிறுவனங்கள், தங்களது தயாரிப்புகளின் விலையை அதிகரிக்க தயாராகி வருகிறது.

மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றங்களால் ஏற்பட்ட இடையூறுகளால் செலவு 810 சதவீத அளவு அதிகரித்ததை தொடர்ந்து, இந்துஸ்தான் யூனிலீவர் நிறுவனம் ஏற்கனவே தனது தயாரிப்பு பொருள்கள் அனைத்திலும் 25 சதவீதம் வரை விலை உயர்வை அமல்படுத்தியுள்ளது.

நுகர்பொருள் நிறுவனங்கள் குறைந்த விலையிலான சிறிய பாக்கெட்டுகளின் எடையை குறைக்கும் அதே வேளையில், பெரிய அளவிலான பேக்குகளின் விலையை உயர்த்தும் நடவடிக்கையையும் தொடங்கியுள்ளன. வரும் நாட்களில் சோப்பு, ஷாம்பு, சலவைத்தூள் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொத்தடிமை வழக்குகளில் விரைந்து தண்டனை! தமிழ்நாடு அரசு மற்றும்

அரசு தலைமைக் குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னாவுக்கு பாராட்டு!

சர்வதேச நீதி மிஷன் கடிதம் !

சென்னை, மே 4- "கொத்தடிமை வழக்குகளில் தண்டனை பெற்றதில் சிறப்பு சாதனை நிகழ்த்திய தமிழ்நாடு அரசுக்கும், நீதிபதிகளுக்கும், மாநில அரசு தலைமைக் குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னாவுக்கு சர்வதேச நீதி மிஷன் பாராட்டி கடிதம் அனுப்பி உள்ளது.

கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்பது, அவர்களுக்கு மறுவாழ்வு வழங்குவது, மற்றும் கொத்தடிமை முறையை ஆதரிக்கும் குற்றவாளிகளுக்கு எதிரான வழக்குகளில் சிறப்பு கவனம் செலுத்தி, தொடர்ச்சியான சுற்றறிக்கைகள் மூலம் விரைவான தண்டனை பெற்றுத் தர நடவடிக்கை எடுத்த தமிழ்நாடு அரசிற்கும், தமிழ்நாடு அரசு தலைமைக் குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னாவுக்கும் நன்றி தெரிவித்து இண்டர்நேஷனல் ஜஸ்டிஸ் மிஷன் கடிதம் அனுப்பியுள்ளது.

சர்வதேச நீதி மிஷன் International Justice Mission (IJM) Tamil Nadu State Judicial Academyயின் கொத்தடிமை முறையால் பாதிக்கப்பட்டோருக்கான ஆய்வரங்குகளில் வள ஆதார நிபுணராக (Resource Person) பங்களித்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பின் தமிழ்நாடு மாநிலத்தின் அட்வ்கெஸி ப்ரஸிடெண்ட் ரேச்சல் பிரசன்னா எழுதியுள்ள கடிதத்தில்,

"தமிழ்நாடு அரசு தலைமைக் குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா, சிறப்பு கவனம் செலுத்தி, மாநில காவல்துறை மற்றும் குற்ற வழக்குத் தொடர்வு இயக்கக வழக்குரைஞர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு, கொத்தடிமைத் தொழிலாளர் வழக்குகளில் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தருவதில் முனைப்புக் காட்டியதன் விளைவாக 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் 2026 ஏப்ரல் வரை உள்ள கால கட்டத்தில் மட்டும், 12 கொத்தடிமைத் தொழிலாளர் வழக்குகளில் தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளதற்கு நன்றி" தெரிவித்துள்ளார்.

அதேபோல், Tamil Nadu State Judicial Academy மற்றும் நீதிபதிகள் ஜெகதீஷ் சந்திரா மற்றும் சரவணன் ஆகியோரின் ஊக்கத்துடன், கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பை முன்னெடுக்க நீதிபதிகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதையும், 2025 நவம்பர் மாதத்தில் மறுவாழ்வு மற்றும் சட்ட நடவடிக்கைகள் குறித்த ஆய்வரங்கமும் நடைபெற்றதையும் சுட்டிக் காட்டியுள்ள அவர், "இவ்வகை வழக்குகளில் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தர அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் மற்றும் குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம், காவல்துறையினருடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயல்பட்டு 60 நாட்களுக்குள் வழக்கை முடிக்க வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டதையும், சுற்றறிக்கையும் அனுப்பப்பட்டதையும் இப்படி அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள், குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம், நீதித்துறை, காவல்துறை மற்றும் தமிழ்நாடு மாநில நீதித் துறை அகாடமி ஆகியவற்றின் ஒருங்கிணைந்து நடவடிக்கையால் மறுவாழ்வு அளித்து சமூகத்தில் மீளச் சேர்க்கும் பணிகளையும், பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைத்திருப்பதையும்" பாராட்டியிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ்நாடு அரசுப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தீவிரம்!

நடப்பு கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை ஒரு லட்சத்தை தாண்டியது!

சென்னை, மே 4– தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் பள்ளிகள் ஜூன் முதல் வாரம் திறக்கப்பட உள்ளது. இதையடுத்து, அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கைக்கான பணிகள் தொடங்கியுள்ளன.

அதன்படி, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2026 – 27 ஆம் கல்வியாண்டிற்கு ஒன்றாம் வகுப்பில் 97 ஆயிரத்து 737 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இதேபோன்று, இரண்டு முதல் எட்டாம் வகுப்புகளில் 8,178 மாணவர்களும், மழலையர் வகுப்புகளில் 6,796 மாணவர்களும் என மொத்தம் ஒரு லட்சத்து12 ஆயிரத்து 711 மாணவர்கள் சேர்ந்துள்ளதாக பள்ளி கல்வித் துறை தெரிவித்துள்ளது.